# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029162

1. District மாவட்டம் : திருப்பூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 2/2018/AC/TPR Date: நாள் 03.12.2018

2. (i) Act சட்டம்: P.C. Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   1) 22.11.2018 சுமார் 12.30 மணி
   2) 27.11.2018 சுமார் 13.30 மணி
   3) 30.11.2018 சுமார் 16.45 மணி
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.12.2018 Time : நேரம் 07.00hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03.12.2018 - G.D VOL. IV Time : நேரம் 07.00hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 50 கி.மீ. தெ.கி.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி நகரம் / நகர் திட்டமிட்ட அலுவலகம், தாராபுரம் நகராட்சி, திருப்பூர் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் - District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N. தமிழ்வேந்தன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் நடராஜ்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 35 yrs/2018 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி 269, கோவிந்தாபுரம், தாராபுரம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. கார்த்திகேயன், சர்வேயர், நகரம் / நகர் திட்டமிட்ட அலுவலகம், தாராபுரம் நகராட்சி, திருப்பூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP 240-34(Type 2) 90.000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் R. கௌசல்யா... பதவி காவல் ஆய்வாளர்.......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..........................-.................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N Pynnee
23/12/2018.

R. Kausalya 23/12/2018

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. கௌசல்யா
Rank: நிலை காவல் ..........No. எண் .........
ஆய்வாளர்,
மகளிர் நீதி மற்றும் இணையவழி பிரிவு,
திருப்பூர்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 2/2018/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. R.கௌசல்யா ஆகிய நான் 03.12.2018-ம் தேதி 07.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு.N.அங்கமுத்து த/பெ நடராஜ், 269, கோவிந்தாபுரம், தாராபுரம் தாலூக்கா, திருப்பூர் மாவட்டம் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு; அனுப்புநர்: N.அங்கமுத்து, S/o நடராஜ், 269, கோவிந்தாபுரம், தாராபுரம் தாலூகா, திருப்பூர் மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். ஐயா, நான் மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். அத்துடன் விண்டுமில் வேலைக்கும் சென்று வருகிறேன். தாராபுரம் டவுன் வார்டு எண்.7-ல் உள்ள "ஆஷா நகர் விஸ்தரிப்பு" என்ற இடத்தில் S.செல்வராஜ் என்பவருக்கு சொந்தமான மனை எண்.17-ஐ ரூ.8,40,000 க்கு விலை பேசி 14.11.2018-ம் தேதி தாராபுரம் சார்பதிவாளர் அலுலகத்தில் கிரைய ஆவண எண்.7681/2018-ன் படி என் பெயரில் பதிவு செய்து கொண்டேன். மேற்படி இடத்தின் பரப்பளவு 1787 1/2 சதுர அடி ஆகும். மேற்படி இடம் தாராபுரம் நகராட்சியில் ந.க.எண்.1738/2018 நாள்.08.06.2018-ன் படி வரன்முறை செய்யப்பட்டது. மேலும் மேற்படி இடத்திற்கு தாராபுரம் நகரம்/நத்தம் நிலவரித்திட்ட தனி வட்டாட்சியர் 11.07.2017-ம் தேதி SR No.11724-ன் படி கூட்டுப்பட்டாவில் மேற்படி செல்வராஜ் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தை செல்வராஜ இடம் இருந்து நான் விலைக்கு வாங்கிவிட்டதால் மேற்படி இடத்திற்கு என் பெயரில் பட்டா வாங்க தாராபுரம் நகரம் / நத்தம் நிலவரிதிட்ட தனி வட்டாட்சியர் அவர்களுக்கு மனு எழுதிக் கொண்டு அத்துடன் 1) எனது கிரைய ஆவணம் எண்.7681/2018, 2) செல்வராஜ் பெயரில் உள்ள மூல பத்திரம் ஆவண எண்.1085/2008, 3) செல்வராஜ் பெயருக்கு கொடுக்கபட்ட பட்டா SR No.11724, 4) சைட் மேப், 5) மேற்படி இடத்திற்கான தனிமனை வரன்முறை செய்து தாராபுரம் நகராட்சி ஆணையர் அவர்கள் 08.06.2018ம் தேதி வழங்கிய உத்திரவு, 6) என்னுடைய ஆதார் அட்டை ஆகியவற்றின் நகல்களை எடுத்துக் கொண்டு

20.11.2018-ம் தேதி மாலை சுமார் 51/2 மணிக்கு தாராபுரம் நகராட்சி அலுவலகத்தில் முதல் மாடியில் இருக்கும் நத்தம் நிலவரி திட்ட தனி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்ற போது தனி வட்டாட்சியர் இல்லை. அங்கு வட்டாட்சியர் சீட்டுக்கு அருகில் உட்கார்ந்திருந்தவரிடம் விபரம் பற்றி சொன்ன போது அவர் அருகில் உட்கார்ந்திருந்தவரை காண்பித்து அவரை பார்க்க சொன்னார். நான் அவரை பார்த்து பட்டா மாறுதலுக்கு வந்திருந்த விபரம் சொன்ன போது என்னிடம் இருந்த விண்ணப்பம் மற்றும் அத்துடன் நான் கொண்டு சென்ற ஆவணங்கள் வாங்கி வைத்து கொண்டார். பின் நாளை மிலாடி நபி விடுமுறை எனவே நாளை மறுநாள் மதியம் வரச் சொன்னரர்.அப்போது அவர் தான் சர்வேயர் என்றும் அவரது பெயர் கார்த்திகேயன் என்றும் தெரிந்து கொண்டேன். நான் 22.11.2018-ம் தேதி மதியம் சுமார் 121/2 மணிக்கு சென்ற போது தாராபுரம் நத்தம் நிலவரி திட்ட அலுவலகத்திற்கு சென்ற போது அங்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்தார். அவரிடம் நான் பட்டா மாறுதலுக்காக வந்திருப்பதை சொல்லி விண்ணப்பத்தையும் ஆவணங்களையும் சர்வேயர் கார்த்திகேயனிடம் கொடுத்திருப்பதாக சொன்ன போது சரி, கார்த்திகேயனை பாருங்கள் அவர் எல்லாம் செய்து கொடுப்பார் என்று சொன்னதால் அப்போதே அவரை பார்த்தேன். நான் பட்டா மாறுதலுக்கு வந்திருக்கும் விபரத்தை அவர் கேட்டு தெரிந்து நான் கொடுத்த ஆவணங்களை சுமார் 1/2 மணி நேரமாக படித்து பார்த்துவிட்டு இதற்கு இன்னும் வரி கட்டி ரசீது வாங்க வேண்டும் என்றார். நான் மேற்படி இடம் வரன்முறைபடுத்தப்பட்டு அனைத்து வரிகளும் கட்டி செல்வராஜ் பெயருக்கு 11.07.2017-ம் தேதி பட்டா கொடுத்திருப்பதை சொன்ன போது அவர் நான் கொடுத்த ஆவணத்தில் செல்வராஜ் பெயரில் இருந்து என் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய தனக்கு தனியாக ரூ.10,000 கொடுத்தால் பட்டாவில் என் பெயரை சேர்ப்பது தொடர்பான அனைத்து வேலைகளையும் உடனே செய்து என் பெயரில் பட்டா வாங்கி தருவதாக சொன்னார். அதன் பிறகு மேற்படி சர்வேயர் கார்த்திகேயன் அவர்களை 27.11.2018-ம் தேதி மதியம் சுமார் 11/2 மணிக்கும், பிறகு 30.11.2018-ம் தேதி மாலை சுமார் 43/4 மணிக்கும் தாராபுரம் நத்தம் நிலவரி திட்ட அலுவலகம் சென்று பார்த்து என் பெயரில் பட்டா கிடைக்க ஆவண செய்யுமாறு கேட்ட போது ரூ.10,000 கொடுத்தால் கூட்டுபட்டாவில் என் பெயரை சேர்த்து பட்டா கிடைக்க தேவையான ஆவணங்களை தயார் செய்து பட்டா வாங்கி கொடுப்பதாக சொன்னார். ரூ.10,000 கொடுத்தால் தான் என் பெயருக்கு பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வார் என்பதை

கறாராக சொல்லிவிட்டார். லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாததல் என்னிடம் பட்டா மாறுதலுக்கு ரூ.10,000 லஞ்சம் கேட்கும் தாராபுரம் நகரம் நத்தம்நிலவரி திட்ட சர்வேயர் கார்த்திகேயன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxx (N.Angamuthu). 03/12/2018. Sir, Received the above said written complaint on 03.12.2018 at 07.00 hrs. The genuineness of the compliant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused also verified through sources and found to be bad. Hence, I registered a case in Tiruppur Vigilance and Anti-Corruption Cr.NO.2/2018/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.30 hrs today on 03.12.2018 and took up for investigation. Sd/- xxxx, R.Kousalya, Inspr. V&AC, TPR, 03/12/2018.

Original FIR along with original written complaint of Tr.N.Angamuthu S/o Nataraj, 269, Govindhapuram, Dharapuram Taluk, Tiruppur District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a Copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

R. Ku sd/ Inspr V&AC TPR 03/12/2018

(R.Kousalya)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.